# சிலிண்டர் தட்டுப்பாடு : ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம்!

## கழகக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் – அமைச்சர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் பங்கேற்பு!



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசையும் துணை போகும் அ.தி.மு.க. கூட்டணியும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வடக்கு ரத வீதியில் அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தலைமையில் நகர ஒன்றிய திமுக நிர்வாகிகள் மற்றும் தேமுதிக காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



விருதுநகர் மாவட்டம் சிவகாசி பேருந்து நிலையம் முன்பாக ஒன்றிய அரசை கண்டித்து திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநகரச் செயலாளர் உதயசூரியன், மேயர் சங்கீதா மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமிழகத்தில் நிலவி வரும் எரிவாயு தட்டுப்பாட்டை தீர்க்க தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசு கண்டித்தும், தமிழகத்திற்கு தொடர்ந்து நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வழங்க மறுக்கும் ஒன்றிய அரசின் செயல்பாடுகளை கண்டித்தும் கண்டன கோஷங்களை எழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.




இராமநாதபுரம் ஒன்றிய திமுக சார்பில் சக்கரைகோட்டை பேருந்து நிறுத்தம் அருகே அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் காலி சிலிண்டருக்கு மாலை அணிவித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில்,மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். கே.நவாஸ்னி, இரா.கருமாணிக்கம், சத்தியமூர்த்தி, எம்.எஸ்.கே.பவானிராஜேந்திரன், இன்பா ஏ.என்.ரகு,, மற்றும் கூட்டணி கட்சி மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாநில,மாவட்ட,நகர் ஒன்றி நிர்வாகிகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் ஒத்தக்கடையில் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் என்டிஏ அரசையும் அதன் கூட்டணி கட்சிகளையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், நேரு பாண்டியன், வடிவேல் முருகன், அ.பா.ரகுபதி, மதிவாணன், ஹக்கீம், வழக்கறிஞர் கலாநிதி, அண்ணாமலை, ஒத்தக்கடை சரவணன், பாலாண்டி, முரளிதரன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.


